**<u>DEPOSITION OF WITNESS</u>**

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.123/2022**
**Prosecution Witness - PW1**

| | |
|---|---|
| Name | : திரு. பிரபாகரன். |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.02.2024.

(A2, A3, A4, A5, A6, A8 are present. A1, A7, A9, A10 are absent. Petition U/s.317 Cr.P.C is filed and allowed).

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்சமயம் தமிழ்நாடு அரசு காவல் துறையில் சிறப்பு நுண்ணறிவுப் பிரிவில் காவல் துணைக் கண்காணிப்பாளராக திருச்சியில் பணிபுரிந்து வருகிறேன். முன்பு குளச்சல் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது 16.11.2011ம் தேதி தேர்தலை முன்னிட்டு குளச்சல் காவல் நிலைய வாகனமான டி.என்.74ஜி 0369 என்ற வாகனத்தில் வாகன ஓட்டுனர் சுரேஷ்குமார் என்பவர் வாகனத்தை ஓட்ட குளச்சல் பங்குத் தந்தை ஸ்டீபன் என்பவர் அவரது அழைபேசியில் இருந்து எனக்கு குளச்சல் கடற்கரை சந்திப்பில் சுமார் 10, 15 பேர் தகராறு செய்து கொண்டிருப்பதாக தகவல் தெரிவித்தார். அதன் பேரில் நான், எனது ஓட்டுனருடன் அங்கு சென்றேன். அப்போது எனக்கு முன்பே தெரிந்த 1வது எதிரி, 2வது எதிரி, 3வது எதிரி, 4வது எதிரி, 5வது எதிரி, 6வது எதிரி ஆகியோரும் அவர்களுடன் மேலும் 15 பேரும் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். நான் எனது வாகனத்தில் இருந்த ஒலிப் பெருக்கி மூலமாக நாளை தேர்தல் நடைபெற உள்ளது என்றும் ஆகவே கூட்டம் கூடாமல் கலைந்து செல்லுங்கள் என்றும் எச்சரித்தேன். அப்போதும் அவர்கள் கலைந்து செல்லாமல் 6வது எதிரி எங்களைப் பார்த்து போலீசிற்கு இங்கு என்ன வேலை, இது எங்கள் ஏரியா, நீங்கள் திரும்பிப் போங்கள் என்று சொன்னார். நான் அப்போதும் காவல் சட்டம் பிரிவு 30 (2) அமலில் இருப்பதால் கலைந்து செல்லுங்கள் என்று கூறினேன். அப்போது

4 மற்றும் 5 எதிரிகள் காவலர்கள் ஆகிய எங்களை போலீஸ் தேவிடியா மவனுகளுக்கு இங்கு என்ன வேலை என்றும் நீங்கள் செல்லவில்லை என்றால் நாங்கள் திருப்பி உங்களை அடிப்போம் என்றும் சொன்னார்கள். நான் எனது வாகனத்தில் இருந்து இறங்கி அவர்களை பிடிக்க முற்பட்ட போது 2 வது எதிரி எனது சட்டையைப் பிடித்து என் நெஞ்சில் கை வைத்து கீழே தள்ளினார். நான் நிலை தடுமாறி கீழே விழுந்தேன். அப்போது 1 வது எதிரி அங்கு கிடந்த ஒரு சவுக்குக் கட்டையை எடுத்து இத்தோடு ஒழிந்து போங்கடா என்று சொல்லி எனது தலையில் ஓங்கி வீசினார். நான் எனது வலது கையால் அந்த அடியை தடுத்து சத்தம் போட்டேன். அப்போது எனது வாகனத்தின் ஓட்டுனர் சத்தம் போட்டுக் கொண்டே ஓடி வரவும் அவர்கள் அனைவரும் தெற்குப் புரமாக ஓடிவிட்டனர். அதன் பின்னர் என்னை அந்த வாகனத்தில் ஏற்றி குளச்சல், பினு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார். நான் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த போது கருங்கல் காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்து நடந்த சம்பவம் தொடர்பாக புகார் வாக்குமூலம் வாங்கினார். மேற்படி புகார் வாக்குமூலத்தில் எனது வலது கையில் அடிபட்டிருந்ததால் இடது கை பெருவிரல் ரேகை வைத்தேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.1. என்னை சம்பவத்தின் போது அடிக்க பயன்படுத்தப்பட்ட சவுக்குக் கட்டை என்னிடம் காட்டப்படுவது தான். அது சா.பொ.1.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**